செ.வெ.எண்.116 நாள்/06.04.2025

# பத்திரிக்கைச் செய்தி

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் கீழ் மாவட்டங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்களில் காலியாக உள்ள 85 அங்கன்வாடி பணியாளர், 2 குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் 69 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்பட உள்ளன. மாவட்டம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்பட உள்ள அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் இனசுழற்சி விவரம் மாவட்ட திட்ட அலுவலகத்திலும், அந்தந்த வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களிலும், தகவல் பலகையில் ஒட்டப்படும். விண்ணப்பங்களை www.icdstngov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இப்பணிகளுக்கென 23.04.2025–ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

## தொகுப்பூதிய விவரம்

தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படும் அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் தொடர்ந்து 12 மாத காலம் பணியினை முடித்த பின், அவர்கள் சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் ஊதியம் பெறுவர்.

| ஊதிய விவரம் | அங்கன்வாடி பணியாளர் | குறு அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் |
|---|---|---|---|
| தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு | ரூ.7700/– | ரூ.5700/– | ரூ.4100/– |
| 12 மாத காலத்திற்கு பின் வழங்கப்படும் சிறப்பு காலமுறை ஊதியம் மாதம் ஒன்றுக்கு | ரூ.7700 – 24,200 என்ற விகிதம் | ரூ.5700 – 18,000 என்ற விகிதம் | ரூ.4100 – 12,500 என்ற விகிதம் |

## தகுதிகள்

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்

| வ. எண் | பொருள் | அங்கன்வாடி பணியாளர் / குறு அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் |
|---|---|---|---|
| 1. | கல்வி | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | தமிழ் சரளமாக எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும் | | |

| | | | |
|---|---|---|---|
| 3. | வயது நிர்ணயம் அறிவிப்பு வந்த நாளின்படி கணக்கிடப்பட வேண்டும் | 25 முதல் 35 வயதுவரை, விதவைகள் / ஆதரவற்ற பெண்கள் / எஸ்.சி. / எஸ்.டி. வகுப்பினர் வயது 25 முதல் 40 வரை, மாற்றுத் திறனாளிகளுக்கு 25 முதல் 38 வயது வரை (35+3 = 38) | 20 வயது முதல் 40 வயது வரை விதவைகள் / ஆதரவற்ற பெண்கள் / எஸ்.சி./எஸ்.டி. வகுப்புனர் – 20 வயது முதல் 45 வரை, மாற்றுத் திறனாளிகளுக்கு 20 முதல் 43 வயது வரை (40+3 = 43) |
| 4. | தூர சுற்றளவு | காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களிலுள்ள குழந்தைகள் மையத்திற்கும், நியமனம் கோரும் விண்ணப்பதாரர் அதே கிராமத்தைச் சேர்ந்தவர், அந்த கிராம ஊராட்சி எல்லையின் அருகிலுள்ள அடுத்த கிராம ஊராட்சியை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும் காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர பஞ்சாயத்துகளிலுள்ள மையங்களில் நியமனம் கோரும் விண்ணப்பதாரரின் அதே வார்டு (அ) அருகிலுள்ள வார்டு (அ) மையம் அமைந்துள்ள வார்டின் எல்லையை பகிர்ந்து கொள்ளும் வார்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். | |

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து காலிப்பணியிட குழந்தைகள் மையம் அமைந்துள்ள வட்டாரம் / திட்டம் (Block / Project)குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ், 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், 12–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை / ஆதார் அட்டை, சாதிச் சான்று, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட (Self attested) நகல்கள் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண் (தாய் / தந்தை இறப்புச் சான்று) மற்றும் மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களில் சுயசான்றொப்பமிட்டு (Self attested) இணைக்க வேண்டும். நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம்.**